கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 19.04.2018

# <u>18.04.2018ம் தேதிய நகர்மன்ற கூட்ட பொருள்கள்</u>

<table>
<tr><th>வ.எண்</th><th>பொருள்கள் – ஏப்ரல் 2018</th><th>தீர்மானம் எண்</th></tr>
<tr><td>1.</td><td>இந்நகராட்சி ஆணையர் அறையில் உள்ள கணினிக்கு இணையதளம் இணைப்பு வழங்கும் மோடம் ஒன்று வாங்கி பொருத்திட மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.1<br>அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>2.</td><td>இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் நகராட்சி பள்ளிகளின் வளாகம் தூய்மைப்பணி மற்றும் பள்ளிக் கழிவறைகள் தூய்மைப்பணி மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.77 பள்ளி கல்வி ப.க.4(1) துறை நாள்.15.4.2015ன்படி நகராட்சியே மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி எல்லையில் உள்ள 17 நகராட்சி பள்ளிகளின் வளாகம் தூய்மைபணி மேற்கொள்ளவும் கழிவறைகள் தூய்மை பணி மேற்கொண்டு கிருமிநாசினி தெளிக்கும் பணியினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.35 லட்சம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.2<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>3.</td><td>அறிவிப்பு பகுதி IV பிரிவு 2 எண்.33 நாள்.25.01.2018ல் சட்ட எண் 6/2018 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் (இரண்டாவது திருத்தம்) திருத்தப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 உட்பிரிவு I பகுதி (சி)ன்படி நகராட்சி பகுதியிலுள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள், நகராட்சி பள்ளிக் கட்டிடங்கள் தவிர ஏனைய அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என சட்டமாக்கப்பட்டுள்ளது.</td><td>தீர்மான எண்.3<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>4.</td><td>கும்பகோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் உள்ள நான்கு சமுதாய கழிப்பிடங்கள் பயன்பாட்டிற்கு தகுதியில்லாமல், சிதிலமடைந்து இடிந்துவிழும் நிலையிலும் உள்ளதால், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அனுமதி பெற்று இக்கழிப்பிடங்களை பொது ஏலத்தில் விட்டு இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ.எண்</th><th>வார்டு எண்</th><th>பயன்படாத கழிப்பிடங்கள் உள்ள இடம்</th></tr>
<tr><td>1.</td><td>1</td><td>மேலக்கொட்டையூர் (சுவாமிமலை மெயின் ரோடு)</td></tr>
<tr><td>2.</td><td>5</td><td>பெருமாண்டி மாதாக்கோயில் தெரு</td></tr>
<tr><td>3.</td><td>10</td><td>காமாட்சி ஜோசியர் தெரு (மந்திரி சந்து)</td></tr>
<tr><td>4.</td><td>33</td><td>துவரங்குறிச்சி தெற்கு தெரு (எம்.ஜி.ஆர். காலனி)</td></tr>
</table></td><td>தீர்மான எண்.4<br>அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>5.</td><td>கும்பகோணம் நகராட்சி பகுதியில் பொதுசுகாதாரப்பணிகளை நல்ல முறையில் பேணிக்காக்கவும், நோய் தொற்று ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் மேகொள்ளப்பட்ட 19.03.2018 ஆய்வுக்கூட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் தினசரி ஊதியத்தில் தற்காலி பணியாளர் (DBC) நியமித்து பணிகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மூன்று மாத காலத்திற்கு நாள் ஒன்றுக்கு 50 நபர்கள் வீதம் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் நியமனம் செய்து பணிமேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.5<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>6.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.T.3925 டயர்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்படி வாகனத்தின் டயர்கள் 4 எண்ணிக்கை புதுப்பிக்கவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.12,000/– (பனிரெண்டாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.6<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>7.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.T.3929 வாகனத்தின் மின்கலம் பழுதடைந்து வாகனம் இயக்க சிரமமாக உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கான மின்கலம் வாங்கவும், அதற்குண்டான உத்தேச</td><td>தீர்மான எண்.7<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>செலவினம் ரூ.7,000/– (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td><td></td></tr>
<tr><td>8.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.F.5739 வாகனத்தின் டயர் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. வாகனத்தின் டயர்கள், வாங்கி பொருத்தி இயக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்படி வாகனத்திற்கு தேவையான டயர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.75,000/– (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.8<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>9.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.F.3857 வாகனத்தின் டயர்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், வாகனத்தினை இயக்குவதில் சிரமம் உள்ளது. எனவே மேற்படி வாகனத்திற்கு உண்டான டயர்கள் (LT - 185, 1AC – டயர்) 4 எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.7,000/– (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.9<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>10.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பில் இயங்கி வரும் TN.68.F.3850 வாகனத்தின் டயர்கள் மிகவும் பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் இருந்துவருகிறது. எனவே, மேற்படி வாகனத்திற்கு தேவையான டயர்கள் 4 எண்ணிக்கை வாங்கவும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.10<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>11.</td><td>இந்நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளின் கழிவறைகள் தூய்மைபணி மேற்கொண்டு கிருமிநாசினி தெளிக்கும்பணி மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.77 பள்ளி கல்வித்துறை (ப.க.4(13) நாள்.13.04.2015ன்படி நகர்மன்ற தீர்மானம் எண்.429 நாள்.30.10.2014ல் அனுமதி பெறப்பட்டு 01.12.2014 முதல் 30.11.2017 முடிய மூன்றாண்டுகளுக்கு பணி உத்திரவு வழங்கி நடைபெற்று வருகிறது. மேற்படி பணியானது மெஸர்ஸ்.மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங் ஏஜென்சி, காரைக்குடி நிறுவனத்தால் 01.12.2017 முதல் தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகிறது. வரும் கல்வியாண்டு முதல் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் 01.12.2017 முதல் 30.04.2018 முடிய உள்ள காலத்தில் மேற்படி நிறுவனத்தால் பணி மேற்கொள்ளப்பட்டது சுகாதார ஆய்வாளரின் குறிப்பின் மூலம் அறியப்படுகிறது. எனவே, மேற்படி காலத்திற்கு பணிமேற்கொண்ட நிறுவனத்தார்க்கு அதே விலை விகிதத்தில் பட்டியல் தொகை வழங்குவது தொடர்பாக மன்றத்தின் பின்னேற்புக்காக பொருள் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்.11<br>அனுமதி<br>அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>12.</td><td>இந்நகராட்சி குடிநீர் பம்பிங் மெயின், பகிர்மானக் குழாய்கள் மற்றும் ஆங்காங்கே நகராட்சியால் பராமரிக்கப்படும் கை பம்புகள் ஆகியவற்றில் 1.4.18 முதல் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர் செய்ய குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் ரூ.4.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>தீர்மான எண்.12<br>அனுமதி<br>வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>13.</td><td>இந்நகராட்சி வார்டு எண்.29 நாகேஸ்வரன் தெற்கு மற்றும் மேற்கு தெரு சந்திப்பில் உள்ள பழுதுபட்ட சிறுபாலத்தினை அகற்றிவிட்டு வருவாய் நிதியின் கீழ் புதியதாக ஆர்.சி.சி சிறுபாலம் கட்டும் பணிக்கு ரூ.4.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதிக்கு.</td><td>தீர்மான எண்.13<br>அலுவலககுறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>14.</td><td>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகளை மேற்பார்வையிட தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரை Outsourcing முறையில் அனுப்ப 28.03.2018ம் தேதியன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவீத விபரம் ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>ஐடியல் இஞ்ஜினியரிங்<br>எழில் நகர், தேப்பெருமாநல்லூர்,<br>அம்மாசத்திரம்.</td><td>மதிப்பீட்டை விட<br>0.14 சதவிகிதம்<br>குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>என்.சரவணன், பி.இ.,<br>10, ஆண்டியப்பன் தெரு,<br>கும்பகோணம்</td><td>மதிப்பீட்டை விட<br>6.40 சதவிகிதம்<br>அதிகம்</td></tr>
</table></td><td>தீர்மான எண்.14<br>அலுவலககுறிப்பு<br>ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td>15.</td><td>நகராட்சி வருவாய்நிதியின் கீழ் செந்தில்நாதன் நகர் பூங்கா, ஸ்ரீநகர் காலனி பூங்கா மற்றும் காந்தி பூங்காவில் குப்பைகள் உரமாக்கும் தொட்டி கட்டி அதற்கு ஷெட்</td><td>தீர்மான எண்.15<br>அலுவலககுறிப்பு</td></tr>
</table>

அமைக்கும் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு முதல் அழைப்பாக 28.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின் படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ |
|---|---|---|---|---|
| 1. | திரு.என்.சரவணன் கும்பகோணம் | 134909.98 | 134665.05 | மதிப்பீட்டை விட 0.19 சதவிகிதம் குறைவு |
| 2. | A.B.Builders கும்பகோணம் | 134909.98 | 141795.32 | மதிப்பீட்டை விட 5.89 சதவிகிதம் அதிகம் |

அங்கீகரிக்கப்பட்டது.

16. இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.49.S.6670 JCB வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு, வாகனம் இயக்க இயலாத நிலையில் இருந்து வந்தது. அதனை சரிசெய்து இயக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளி வரப்பெற்றது. மன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | டைனோ டெக்<br>34ஏ/10ஏ, பழைய தஞ்சாவூர் ரோடு<br>பி.எஸ்.என்.எல் குடியிருப்பு அருகில்,<br>திருவாரூர் | ரூ.328898/– |

**தீர்மான எண்.16**
அனுமதி அளிக்கப்பட்டது.

17. இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் JCB Chain Dozer ஆயில் சர்வீஸ் செய்யப்பட வேண்டியுள்ளது. நகர்மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டதில், அங்கீகரிக்கப்பட்ட பழுது நீக்கம் நிறுவனமான ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்சி, கும்பகோணம் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்சி<br>கும்பகோணம் | ரூ.76,085/– |

**தீர்மான எண்.17**
அனுமதி அளிக்கப்பட்டது.

18. இந்நகராட்சிக்குச் சொந்தமான அறிஞர் அண்ணா புதிய பேருந்து நிலையத்தின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கட்டண கழிவறை பழுதடைந்து இருந்ததினாலும் பொது சுகாதார சீர்க்கேட்டுடனும் இருந்ததாலும் 2016ஆம் ஆண்டு மகாமகத்தினை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேராய்வின்போது கட்டண கழிவறை உரிமத்தை இரத்து செய்து மேற்படி கழிவறை பூட்டப்பட்டது. தற்பொழுது பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள கட்டண கழிவறை பூட்டிய நிலையில் உள்ளது. நகர்மன்ற தீர்மான எண்…. நாள்.28.02.2018ல் தொண்டு நிறுவனம் மூலம் கட்டண கழிப்பிடத்தை தங்களது சொந்த செலவில் பழுது மேற்கொண்டும் பராமரிப்பு பணி செய்து கொண்டும் சிறந்த முறையில் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையிலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் இலவசமாக பயன்படுத்திக்கொள்ளவும், **06.04.2017** அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | தொண்டு நிறுவனம் பெயர் | விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | **ஆப்பிள் டிரேடர்ஸ்,**<br>14– ஜாகீர் உசேன் தெரு,<br>கும்பகோணம் | நகராட்சி 40% சதவீதமும்,<br>தொண்டு நிறுவனத்திற்கு 60% சதவீதமும் |
| 2 | ஜி.எஸ்.டிரேடர்ஸ்,<br>16–ஹாஜியார் தெரு,<br>கும்பகோணம் | நகராட்சி 25% சதவீதமும்,<br>தொண்டு நிறுவனத்திற்கு 75% சதவீதமும் |
| 3 | **எஸ்.கௌதம்,**<br>24– ஜாகீர் உசேன் தெரு,<br>கும்பகோணம் | நகராட்சி 30% சதவீதமும்,<br>தொண்டு நிறுவனத்திற்கு 70% சதவீதமும் |

**தீர்மான எண்.18**
அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

எனவே மேற்கண்ட விலைப்புள்ளிகளில் **ஆப்பிள் டிரேடர்ஸ்,**14– ஜாகீர் உசேன் தெரு, கும்பகோணம் என்ற தொண்டு நிறுவனம் வருவாயில் நகராட்சி 40% சதவீதமும், தொண்டு நிறுவனத்திற்கு **60%** சதவீதமும் என குறிப்பிட்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மேற்படி ஆப்பிள் டிரேடர்ஸ் என்ற மக்கள் உதவி மையத்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்க பொருள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

19. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, பாதாள சாக்கடை திட்டம், வரியில்லா இனங்கள் தொகைளை உடனடியாக செலுத்திட தெரிவித்து ஆட்டோ வாகனம் மூலம் ஒலிபெருக்கி வைத்து நாள் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் விளம்பரம் செய்திட தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதன் பேரில் விலைப்புள்ளிகள் 25.01.2018 அன்று தருவிக்கப்பட்டது. தருவிக்கப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் | நாள் ஒன்றுக்கு வாடகை அடிப்படையில் ரூ. |
|---|---|---|
| 1. | தென்றல் வர்த்தக விளம்பரம், 12பி.மந்திரி சந்து, கும்பகோணம். | 1600/– |
| 2. | ஜெயம் பப்ளிசிட்டீஸ், 127ஏ.காமராஜ் நகர் விரிவாக்கம், நீலத்தநல்லூர் சாலை, கும்பகோணம். | 1650/– |
| 3. | நிலா வர்த்தக விளம்பர சேவை 10சி.மல்லுக செட்டித்தெரு, கும்பகோணம். | 1700/– |

**தீர்மான எண்.19** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

20. இந்நகராட்சி பொதுசுகாதார வளாகத்தில் மின்வயரிங், மோட்டார் பம்ப் செட்டுகள் பழுது சீர் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,90,000/–க்கு 10.04.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / அதிகம் |
|---|---|---|
| 1. | திரு.என்.சரவணன், பி.இ., ஒப்பந்ததாரர் ஆண்டியப்பன் தெரு கும்பகோணம் | மதிப்பிட்டைவிட 0.24% குறைவு |
| 2. | ஆ/ள.வி'ஜியலெட்சுமி டிரேடர்ஸ் பழைய அரண்மனைதெரு கும்பகோணம் | மதிப்பிட்டைவிட 0.26% அதிகம் |

**தீர்மான எண்.20** அலுவலகக்குறிப்பு ஏற்கப்பட்டது.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**